4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 17/2021 நாள்: 22.09.2025 வா.சா.1 – கவிதா

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

எனக்கு படிப்பறிவில்லை. நான் மடத்துக்குளம் தாலுகா, கொமரலிங்கம், முத்துராஜா வீதியில் வசித்து வருகிறேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை அனைத்தும் எனக்கு தெரியும். வழக்கில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது பெயரில் நாளது தேதிவரை எவ்வித சொத்துக்களும் இல்லை என்றால் சரிதான். நான் இல்லத்தரசியாகவும் உள்ளேன், வேலைக்கும் செல்வேன். எனக்கு வங்கியில் கணக்கு உள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கொமரலிங்கத்தில் வங்கி கணக்கு உள்ளது. அதைதவிர வேறு வங்கி கணக்கு எனக்கு இல்லை. நான் வருமான வரி எதுவும் செலுத்துவதில்லை என்றால் சரிதான். என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் சேர்ந்து மாதம் ரூ.50,000 வரை வருமானம் வரும். எனக்கு 2 குழந்தைகள் உள்ளன. ஒரு மகனுக்கு திருமணமாகிவிட்டது. அவர் தனியாக வசிக்கிறார், ஒரு மகன் என்னோடு வியாபாரம் செய்து வருகிறார். இரண்டாவது மகனுக்கு தேங்காய் வியாபாரம் மூலம் வருமானம் உண்டு. அவருக்கு மாதம் ரூ.20,000/– வருமானம் வரும். நான் இந்த வழக்கில் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மாற்றுப்பரிகாராமாக முன் தொகைக்கு வட்டி 18% வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 18% வட்டி என்பது எவ்வளவு தொகை என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்று எனக்கு தெரியும், அதன் சர்வே எண் தெரியாது. அதன் விஸ்தீரணம் என்னவென்று எனக்கு தெரியாது, தற்போது சாட்சி ஒரு ஏக்கர் என்று

சொல்லியுள்ளார். ஒரு ஏக்கர் என்று பிரதிவாதி என்னிடம் சொன்னார். தாவா சொத்திற்கு நான்கு புறமும் யாருடைய சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. ஆனால் பிரதிவாதியின் தந்தை சொத்து என்று என்னிடம் சொன்னார். நான் பிரதிவாதியின் பத்திரத்தை பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை அளந்து பார்த்தோம். வா.சா.ஆ.1 ஆவணத்தை இதுவரை நான் பார்த்ததில்லை. மேற்படி ஆவணத்தில் ஆவணம் தயாரித்தவரின் கையொப்பமில்லை என்றால் சரிதான். அதில் சாட்சி கையொப்பம் போட்டவரின் நபர்கள் எனக்கு தெரியும், ஆனால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பம் போட்டவர்களின் முகவரி வா.சா.ஆ.1 ல் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எங்கு வைத்து எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சாட்சி கணியூரில் வைத்து எழுதியதாக சொன்னார்கள், ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது. நான் மேற்படி ஆவணத்தில் வீட்டில் வைத்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். மற்றவர்கள் எங்கு வைத்து மேற்படி ஆவணத்தில் கையொப்பம் போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் போட்டேன். என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் 30.01.2020 ல் ரூ.5 லட்சத்தை பிரதிவாதிக்கு ரொக்கமாக செலுத்தியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை பிரதிவாதிக்கு கொடுத்தது உண்மை. மேற்படி ரூ.5 லட்சத்தை ரூ.500 நோட்டுகளாக 30.01.2020 ல் கொடுத்தேன். மேற்படி ரூ.5 லட்சத்தை பிரதிவாதிக்கு ரொக்கமாக கொடுக்கும் போது நானும், பிரதிவாதியும் மட்டும் தான் இருந்தோம். அப்போது வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். நான் வழக்கில் கொடுத்ததாக சொல்லப்படும் அனைத்து தொகையும் நம்பிக்கையின் அடிப்படையில் தான்

கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.5 லட்சத்தை IOB வங்கியிலிருந்து எடுத்து கொடுக்கவில்லை, வியாபாரத்திற்காக நான் கைவசம் வைத்திருந்தேன். வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் வழக்கிற்கு 10 நாட்களுக்கு முன்பு போடப்பட்ட கையொப்பம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள அனைத்து கையொப்பங்களும், ஒப்பளிப்புகளும் ஒரே நாளில் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுவாதீனம் எடுத்த விவரத்தை வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பமிட்டவர்களை விலாசம் தெரியாததால், அவர்களை அழைத்து வந்து இந்நீதிமன்றத்தில் விசாரிக்க மாட்டேன் என்றால் சரிதான்.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.